(b) the quota of chemical fertilisers allotted by the Government to these firms during 1967–68; and

(c) whether the fertiliser mixtures produced by these firms are tested?

கலப்பு உரம்

திரு. என் ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உணவு-வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழகத்தில் கலப்பு உரம் தயாரிக்க தமிழக அரசு அனுமதி பெற்ற நிறுவனங்கள் யாவை?

(இ) இந்த நிறுவனங்களுக்கு 1967-68-ல் அரசு வழங்கிய ரசாயன உர அளவு எவ்வளவு?

(உ) இந்த நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் கலப்பு உரம் பரிசோதனை செய்யப்படுகிறதா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: (அ), (இ) & (உ) விவர அறிக்கை ஒன்று மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, இந்த ரசாயன உரம் உபரியாக இருக்கும்போது யாருக்கு எவ்வளவு கொடுக்கிறார்கள் என்பதைப் பற்றி ஆட்சேபணையில்லை. நமக்கே பற்றாக் குறையாக இருக்கும்போதுகூட, இந்தக் கம்பெனிக்காரர்கள் பெற்று வருகிறார்கள். சட்ட மன்றத்திலும் இதுபற்றி கூறினேன். பற்றாக்குறை காலத்திலாவது கலப்பு உரம் வர்த்தகம் செய்கிறவர்களுக்குக் கொடுப்பதை அரசு நிறுத்தி வைக்குமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கனம் உறுப்பினர் கூறும் குற்றச்சாட்டு சரியல்ல. இப்போது 21 கோடி ரூபாய்க்கான உரம் தேங்கிக் கிடக்கிறது.

Aduar Cancer Institute

*100 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state—

(a) the nature of assistance afforded by the Government to the Cancer Institute at Advar; and

(b) the number of patients who can be accommodated in that Institute?

அடையாறு புற்றுநோய் மருத்துவமனை

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு சுகாதார-அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அடையாறு புற்றுநோய் மருத்துவமனைக்கு தமிழக அரசு செய்து வரும் உதவிகள் யாவை?

Printed as Appendix I on pages 195–200

(இ) அந்த மருத்துவமனையில் எத்தனை பேர் தங்கி சிகிச்சை பெறலாம்?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) ஆண்டுக்கு ரூபாய் இரண்டரை லட்சம் நிர்வாக மான்யமாக கொடுக்கப் படுகிறது.

(இ) 194 பேர் தங்கி சிகிச்சை பெறலாம்.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, இந்த மருத்துவ மனைக்கு சென்ற மூன்று ஆண்டுகளில் ஆண்டுதோறும் பழைய காங்கிரஸ் ஆட்சியில் எவ்வளவு கொடுத்தார்கள்? புதிய ஆட்சியில் இரண்டாண்டில் எவ்வளவு கொடுத்தார்கள் என்ற விவரம் கூறமுடியுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : ஆண்டு ஒன்றுக்கு 2½ லட்சம் ரூபாய் என்றால் மூன்று ஆண்டுகளுக்கு 7½ லட்சம் ரூபாய் என்றுதான் வைத்துக்கொள்ள வேண்டும்.

THIRU D. SANTOSHAM : Mr. Chairman, Sir, this particular Cancer Institute has assumed some historic importance in recent times, because it was there our great 'Anna' had treatment. The medical attendants who attended on him waged a heroic battle against this dreadful disease. Will the Government take steps to give assistance and try to upgrade it and make this institution a first-class institution equal to one of the best in the world and name it in memory of 'Anna'? This will be a fitting and proper memorial to "Anna".

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இப்போது அதை மனதில் வைத்துத்தான் அண்ணா சிகிச்சைக்குத் தங்கியிருந்த அறையில் வைக்கப்பட்டிருந்த ஒரு ஏர்-கண்டிஷன் பிளாண்டை அந்த மருத்துவமனைக்கு அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்டது. காஞ்சிபுரத்தில் ஒரு ஆராய்ச்சி நிறுவனம் துவக்க இருக்கிறது. அந்த ஆராய்ச்சி நிறுவனத்தின் மூலமாகச் சிகிச்சை பெறுவதற்கு உள்ளவர்கள், இந்த மருத்துவ மனையில் வந்து சிகிச்சை பெறுமளவிற்கு கனம் உறுப்பினர் கூறியதைப்போல பெரிய மருத்துவ மனையாக்க உத்தேசமிருக்கிறது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா: இந்தியாவிலுள்ள புகழ்பெற்ற மூன்று புற்றுநோய் மருத்துவ மனைகளில் இதுவும் ஒன்றாகும். 1967-ம் ஆண்டுக்கு முன்பு இரண்டு லட்சம் ரூபாய் தான் கொடுக்கப்பட்டு வந்தது. இந்த அரசாங்கம் வந்த பிறகு 2½ லட்சம் ரூபாய் கிராண்ட் கொடுக்கிறோம்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு உறுப்பினர் சொன்ன யோசனையைச் சேர்த்துப் பரிசீலனை செய்யலாம்.

திரு. சா. கணேசன் : மாண்புமிகு உறுப்பினர் கருத்தோடு ஒட்டி நான் சில கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தியாவிலுள்ள மிக முக்கியமான மூன்று புற்றுநோய் சிகிச்சை

சாலைகளில் இது ஒன்றாகும். அத்தோடுகூட இங்கு நல்லமுறையில் பயிற்சி பெற்றவர்கள் ஒரே நோக்கோடு பணியாற்றுகிற நிலையில் இருப்பதால் இதை இன்னும் வளப்படுத்தி, பெரிதாக ஆக்கி நேரடியாக கவர்ன்மெண்ட் எடுத்துக் கொண்டு விடாமல், இதற்கென்று ஒரு போர்டு அமைத்து, உரிய பல வழிவகைகளைச் செய்ய, அரசு வேண்டிய திட்டத்தை வகுக்குமானால், ஏராளமான பணம் இந்த இன்ஸ்டிடியூஷனுக்கு வரும் என்பதை மனத்தில் கொண்டு செயல்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இப்போதுள்ள அடையாறு புற்றுநோய் மருத்துவமனை நிர்வாகி திறமைசாலி. இப்படி நிதி வசூலித்து அதை வளர்ப்பதிலும் அந்த மருத்துவமனையை நல்ல வகையில் வைத்திருப்பதிலும் மிகுந்த அக்கறை எடுத்துக் கொண்டிருக்கிறார். அதற்கு உரிய நேரத்தில் உரிய வகையில் கூடுமானவரையில் அரசு எல்லாவிதமான உதவியையும் செய்யத் தயாராக இருக்கும்.

திரு. சா. கணேசன் : வளர்ச்சிக்கு ஏற்ற வழிவகை செய்ய ஒரு அட்வைசரி போர்டு மாதிரி அமைக்க அரசு முன்வந்தால் மிக விரைவில் அது வளரும் என்று அறிந்து அந்த வகையில் செயல்பட முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அது அந்த நிர்வாகி எடுக்கக் கொள்ளவேண்டிய முயற்சி என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். எத்திராஜுலு : அடையாறு புற்றுநோய் மருத்துவமனை தனியாருடையது. அதில் 194 பேர்கள் தங்கி சிகிச்சை பெறலாமென்று அமைச்சர் சொன்னார்கள். தமிழக அரசின் கீழ் உள்ள ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு வருகிறவர்களில் எத்தனை பேர் தங்கி சிகிச்சை பெறலாம் என்று சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இங்குள்ள தகவலில் அடையாறில் இருக்கிற புற்றுநோய் மருத்துவ மனையில் 194 பேர்கள் தங்கியிருப்பதற்கான வசதியிருப்பதாக இருக்கிறது. பொது மருத்துவமனையில் ஏறக்குறைய 8,000 பேர் தங்கலாம். அங்கே புற்றுநோய் மட்டுமல்ல, எல்லாவிதமான நோய்களுக்கும் படுக்கை வசதி செய்து தரப்பட்டிருக்கிறது. குறிப்பாக இந்த நோய்க்கு சிகிச்சை பெறுகிறவர்கள் எத்தனை பேர் என்ற தகவல் இல்லை.

திரு. என். ஆர். தியாகராஜன்: தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே சிறந்த மருத்துவமனை இருந்தும்கூட, அந்தச் சிறந்த மருத்துவமனையில் மகளிலேயே மறைந்த முதலமைச்சரைக் கொண்டு போய் காட்டாமல் இருந்தது ஏன்? அங்கே பார்ப்பதற்குத் தயாராக இல்லையா? அல்லது வேண்டுமென்றே காட்டாமல் அமெரிக்காவுக்குக் கொண்டு சென்றார்களா?

3rd March 1969]

திரு. ஜி. சுவாமிநாதன் : சென்னையிலுள்ள புற்றுநோய் மருததுவமனையை விரிவுபடுத்தினால் அதிகப்படியான நோயாளி களுக்கு உதவியாக இருக்குமென்று சொன்னார்கள். தஞ்சையி லிருந்து வருகிறவன் நான். தஞ்சையில் பெரிய ஜெனரல் ஆஸ்பத்திரி இருக்கிறது. திருநெல்வேலியில் இருப்பவர்கள்கூட சென்னைக்கு வந்துதான் வைத்தியம் செய்து கொள்ளும் துர்ப்பாக்கியமான நிலையில் இருக்கிறார்கள். சென்னை, செங்கல் பட்டில் மாத்திரம் அமைக்காமல் திருநெல்வேலி, தஞ்சை போன்ற இடங்களில் புற்றுநோய்க்கான சிகிச்சை அமைத்தால் ஏழை களுக்குப் பயன்படும் என்பதால் அதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இப்போது காஞ்சி புரத்தில் உலக சுகாதார நிறுவனத்தின் துணைகொண்டும், நார்வே அரசாங்கத்தின் உதவியினாலும் 10 லட்சம் ரூபாய் செலவழித்து, ஒரு ஆராய்ச்சி நிறுவனம் இந்த அரசாங்கம் நிறுவியிருக்கிறது. அது அடையாறில் உள்ள புற்றுநோய் இயக்குனரின் துணை கொண்டு காஞ்சிபுரத்தில் ஏற்பாடாகிறது. காஞ்சீபுரத்தில் ஏற்பாடாகிற ஆராய்ச்சி நிறுவனத்திலிருந்து 'புற்றுநோய்தான்' என்று வரையறுக்கப்பட்ட நோயாளிகளுக்கு அடையாறில் சிகிச்சை தரவேண்டுமென்றுதான் ஆரம்பிக்கிறார்கள். இது தொடர்ந்து ஆண்டுக்கு 70 ஆயிரம் நார்விஜியன் க்ரோன் விதம் ஐந்தாண்டு காலத்திற்கு அந்த நார்வே அரசாங்கம், அதற்கான உதவி செய்யத் தயாராக இருக்கிறது. தொடர்ந்து அடையாற்றில் இருக்கிற மருத்துவமனை விரிவடையலாம் என்ற நம்பிக்கை இதன் மூலம் பெறப்படுகிறது.

THIRUMATHI S. MANJUBHASHINI : The Cancer Institute at Adyar has been the successful effort of the work of the All-India Women's Conference. Will the Government take steps to help it remain as a mere voluntary body and give all the Government help possible for its expansion and development ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மாதாது மகத்தான பணியின் காரணமாகத்தானே அல்லவோ எப்படியிருப்பினும் அரசாங்கம் அதற்கு நல்ல முக்கியத்துவம் தந்து இந்த உதவியை செய்து வருகிறது. மேலும் அந்த மருத்துவமனை சிறப்படையத் தான் மேலும் பல திட்டங்கள் தீட்டி வருகிறது.

Higher Grade Physical Education Teachers

* 101 Q.—THIRU G. KRISHNAMOORTHY (on behalf of Thiru M. Rajah Iyer) : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(a) whether any resolution passed at the Physical Education Conference held during the first week of March 1967 at Sirkali requesting the revision of scales of pay for Higher Grade Physical Education Teachers has been received by the Government; and

(b) if so, the action taken thereon ?